# அழுக்கு உணவகங்கள்

இன்னமும் நாம் மிகப் பின்னோக்கிய நிலையிலேயே இருக்கிறோம் என்பதற்கு முக்கியமான அடையாளங்களுள் ஒன்று இந்த அழுக்கு உணவகங்கள்! நாடு பூராவும் பல அளவுகளில் பரவிக் கிடக்கும் இவ்வுணவகங்களின் அக, புறத் தோற்றங்களை வருணிக்கை வார்த்தைகள் இல்லை; மோசத்திலும் மோசம் அவ்வளவு மோசம்!!

கிராமங்கள், சிற்றூர்கள், பல அளவுகளிலான நகரங்கள் என எங்கேயும் இயங்குகிற டீக்கடைகள், சாலையோரத் தள்ளுவண்டி உணவகங்கள், இட்லி, புரோட்டா கடைகள், சைவ அசைவ உணவகங்கள் என எல்லாம் அழுக்குக் குவியல்களின் அங்கமாக விளங்கிக் கொண்டிருக்கின்றன. இதுமாதிரியான உணவு வியாபாரங்களை நிர்வகிப்பவர்கள், பணம் சம்பாதிப்பதில் மட்டுமே குறியாய் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் எப்போது திருந்துவர்களோ அல்லது திருததப்படுவார்களோ தெரியவில்லை!

நாம் ஐந்து நட்சத்திர ஓட்டல்களின் தோற்றத்தை, சுத்தத்தை எதிர்பார்க்கவில்லை. குறைந்தபட்சம் இவ்வுணவகங்களின் சுவர்களுக்கு வருடம் ஒருமுறை சுண்ணாம்பு, உட்காரும் பெஞ்சுகளுக்கு பெயிண்ட செய்து, கூரையின் உட்புறங்களில் உள்ள ஒட்டடை அழுக்குகளை அவ்வப்போது நீக்குதல் போன்றவற்றை செய்து வரலாம். உணவகங்களின் உட்புறம் பகலிலும் இரவிலும் நல்ல வெளிச்சம் வரும்படியாக அமைதல் அவசியம். சுற்றுப்புறங்களில் குப்பைகள் மற்றும் அழுக்குத் தண்ணீர் சேர்வது, அழுக்குப் பிராணிகளை அங்கீகரிப்பது தவிர்க்கப்பட வேண்டும். நல்ல காற்றோட்டம் உள்ள வகையில் ஜன்னல்கள் அமைப்பது வாடிக்கையாளர்களுக்கு சுகாதாரம் தரும். அடுப்புப் புகை மேலே செல்ல உயராமானப் புகைப்போக்கிகள் தேவை. உணவகங்களில் சமைப்பவர், பரிமாறுபவரிலிருந்து முதலாளி வரை சுத்தமான ஆடை அணிந்து தூய்மையாக இருக்க பழக வேண்டும்.

இன்னமும் சில இடங்களில் இருந்து வருகிற அழுக்குப் பிடித்த பிளாஸ்டிக், அலுமினிய டம்ளர்களைத் தூக்கி எறிந்துவிட்டு எவர்சில்வருக்கு கட்டாயம் மாற வேண்டும். சாப்பாட்டு மேஜைகளை நீண்ட நாட்களுக்குப் பயன்படுத்திவரும் ஒரே அழுக்குத் துணியால் சுத்தம் செய்பவரே மேலும் மூக்கு சிந்திய பிறகு ஆடையில் துடைத்துவிட்டு அதன் பிறகு எங்கெங்கேயே சொறிந்துவிட்டு அதே கையினால் உணவுப் பதார்த்தங்கள் வைப்பதை பல இடங்களில் காணமுடிகிறது. ஒரு நபர் சிறு உணவகங்கள், டீக்கடைகளில் ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனி ஆட்களை எதிர்பார்க்க முடியாததுதான். இருப்பினும் இருக்கும் ஒருவர் இருவர் நன்றாகக் கைகளைக் கழுவி பிரத்தியேகமாக உள்ள தனி துணித்துண்டில் கைகளைத் துடைத்துவிட்டு பதார்த்தங்களை வைக்கலாம்; ஆனால், மாறாக அவரது ஆடைகளிலேயே கையைத் துடைக்கிறார்கள். இப்போது உணவு எடுக்கும் குறடுகள் மிகக் குறைந்த விலையில் எங்கும் கிடைக்கின்றன. கிராமப் புறங்களில் இருந்து நகர்ப்புறங்கள் வரை இனிவரும் காலங்களில் அவற்றைப் பயன்படுத்த பழகிக் கொள்வது நாம் முன்னேறுகிறோம் என்பதை தெரிவிக்கும். இதை செய்வதால் மேற்படி கடைகள் நடத்துபவர்களுக்கு எந்த நஷ்டமும், கஷ்டமும் ஏற்பட்டுவிடாது.

இத்தொழிலில் உள்ளவர்கள் அனைவரும் விரல் நகங்களை அடிக்கடி சுத்தமாக வெட்டிக் கொள்ள வேண்டுமென்பது சட்டப்படி இருக்கிறது என்றாலும் அதை யாரும் கண்டுக்கொள்ளவில்லை! இதை கண்காணிக்க வேண்டிய உணவுத்துறை, சுகாதாரத்துறை போன்றவைகள் இவர்களை சரிப்படுத்த வேண்டுகிறோம். கிருமிகள் உள்ள வேற்று நிறத்திலுள்ள நீரை குடிநீர் என பாண்டை டம்ளர்களில், அழுக்கு அடைந்த நீண்ட நகங்கள் கொண்ட விரல்களைத் தண்ணீருக்குள் விட்டு ஆட்டிக்கொண்டு வாடிக்கையாளர்களுக்கு வைப்பதைவிட இந்த லோகத்தில் கொடுமை ஒன்று இருக்க முடியாது. ஆனால் நம் சக மனிதனோ எதுவும் உணர்ந்து கொள்ளாமல் அதை தேனாமிர்தமாகக் குடித்து வருகிறான். பின்னர் ஒரு நாளில் அதிலிருள்ள கிருமிகள் மனித வயிற்றுக்குள்

நன்கு வளர்ந்து இனப்பெருக்கம், இடப்பெருக்கம் செய்து அதனுடைய உண்மை வாழ்க்கையை ஆரம்பிக்கிறது. அப்போது அது நோய்களாக நமக்கு தெரிய வந்து தொல்லை தருகிறபோது டாக்டர்களிடம் போய் கொட்டித் தொலைக்க வேண்டியுள்ளது.

இதைவிட கொடுமையானதாக, பல உணவகங்களில் மொத்தமாக தண்ணீர் வைத்திருக்க பயன்படுத்தும் பெரிய இரும்பு, பித்தளை, அலுமினியக் குவளைகளைப்பற்றி கேட்கவே வேண்டாம்! அதிலும் குறிப்பாக நகர பேரூந்து நிலையங்களுக்கு அருகில் உள்ள 'டப்பா' அளவு உணவகங்களில் எல்லாமே ஸ்பெஷல்! அவற்றின் பக்கத்திலேயே பல மாதங்களாகச் சேர்ந்து நிற்கும் எந்தவித இன்டிமேட்சென்ட் கொடூர வாசனை சாக்கடைகள் மற்றும் வேறு சங்கதிகள் என எல்லாமே கேவலம்; இருப்பினும் நமக்கு எல்லாம் பழகிப்போன சாதாரணம்!

உணவகங்களின் அடுப்புகளை வாசலில் சாலையோரமாக வைத்து உணவு தயார் செய்வது மிகத் தவறான செயலாகும். சாலையிலிருந்து கிளம்பும் கிருமிப் புழுதிகள் நேராக அங்குள்ள அடுப்பின் மேல் இருக்கும் உணவுகளுக்குத்தான் பயணம் செய்கின்றன. வருங்காலங்களில் அனைத்து உணவுக்கடை அடுப்புகளையும் கடைக்குள்ளேயே வைத்து சமைப்பதுடன் அது கண்ணாடி தடுப்புகளின் மூலமாக வாடிக்கையாளர்களுக்கு உட்கார்ந்த இடத்திலிருந்து தெரியும் வண்ணம் அமையப்பெற வேண்டும். இதற்கு சம்மந்தப்பட்ட அலுவலர்கள் முறைப்படி நடவடிக்கை எடுக்க வேணுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

உணவுப் பொருள்கள் என்பது 'உயிர் காக்கும் மூலப்பொருட்கள்' ஆகும்ஸ அது நன்றாக இருந்தாழொலிய நாம் நலமாய் இருக்க இயலாது. எனவே இப்பணியில் உள்ள அத்தனை நபர்களும், பொதுமக்களும் இந்நிலைக்காக அக்கறை எடுக்க வேண்டும். தூய்மை இல்லாத உணவுக் கடைகளை, பொதுமக்கள் நிராகரிக்க வேண்டும்; ருசியைவிட தூய்மை பல மடங்கு அவசியமானது!

இம்மாற்றங்களெல்லாம் நிகழ்ந்தால்தான் நாம் முன்னேறியவர்களாகக் கருத முடியும்; அதைத்தான் உலகம் ஏற்கும்.